Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.11 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ஜீவானந்தம் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of October 2025.

(Accused A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை**:

நான் தற்போது பெருந்துறை, Mobitech Wireless Solution Private Limited கம்பெனியில் சேல்ஸ் மேனேஜராக பணிபுரிகிறேன். நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது 13.08.2024ம் தேதி நல்லூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் கரும்பு காட்டில் சொட்டு நீர் பாசனத்திற்காக பொருத்தப்பட்டிருந்த கன்ட்ரோல் வால்வு மற்றும் கேபிள் ஆகியவை எரிந்து சேதமானதை ஆய்வு செய்து அறிக்கை கொடுக்குமாறு கடிதம் கொடுத்தார்கள். அதன்படி, தங்கவேல் என்பவருக்கு சொந்தமான வீரக்குட்டை கிராமத்தில் உள்ள தோட்டத்தை போய் பார்த்தேன். அதில் 5 கன்ட்ரோல் வால்வுகளும், கேபிளும் எரிந்து சேதமாகியிருந்தது. அதன் சேதமதிப்பை கணக்கீட்டு அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய அந்த அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :

எரிந்து போன காட்டில் சொட்டு நீர் பாசன அமைப்பை நாங்கள் தான் பொருத்திருந்தோம். அதனடிப்படையில் போலீசார் என்னிடம் சேதமதிப்பு அறிக்கை கேட்டார். 2019ல் மேற்படி பாசன அமைப்பை பொருத்தினோம். அதற்கான பில்கள் எங்களிடம் இல்லை. நில உரிமையாளர் தங்கவேலுவிடம் உள்ளது. அந்த பில்களின் நகல் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. அதை காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை. 5 கன்ட்ரோல் வால்வுகளும் கரும்பு காட்டுக்குள் இருந்தது. அவற்றை லாரி டயர் டியூப் போட்டு மூடியிருந்தார்கள். எரிந்து போனதாக சொல்லியுள்ள கேபிள் மோட்டர் ரூமிலிருந்து கன்ட்ரோல் வால்வு வரை வருகிறது. அந்த கேபிளை மண்ணில் ஒரு அடி ஆழத்தில் பிவிசி பைப் வழியாக போட்டிருந்தார்கள்.

அ.சா.ஆ.6 அறிக்கையில் குறிப்பிட்டுள்ள உபகரணங்களில் கன்ட்ரோ்ல் வால்வு மற்றும் கேபிள் தவிர மற்ற உபகரணங்கள் மோட்டர் ரூமில் வைக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். 1 அடி ஆழத்திற்கு கீழே பதிக்கப்பட்டுள்ள கேபிள் காட்டில் தீப்பிடிக்கும்போது சேதமடையாது என்று சொன்னால் Short Circuit ஏற்பட்டு உருகிவிடும். லாரி டயர் டியூப்பை போட்டு மூடி வைத்திருந்ததால் கன்ட்ரோல் வால்வுகளுக்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தீயினால் Short Circuit ஏற்படாது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தங்கவேல் காட்டில் பாசன நீர் அமைப்பை போடவில்லை என்றும், போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க அறிக்கை வழங்கி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.